# அற இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

முனைவர்.ஜே.மார்க்ரெட்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சாராள்தக்கர் கல்லூரி, திருநெல்வேலி.

9

**ஆய்வுச் சுருக்கம்:**

இலக்கியமும் அறநூலும் சமுதாயமென்னும் ஆற்றுக்கு நீரும் கரையும் போல்வன என்பர் வ.சு.ப.மாணிக்கம். இக்கூற்றுக்கு இணங்க அற இலக்கியங்கள் இன்று வரை சமுதாயமென்னும் ஆற்றுக்குக் கரைபோல நின்று காத்து வருவதை அற இலக்கியப்பாடல்கள் வழி காண முடிகின்றது. இவ்வாறு இலக்கியங்களில் வாழ்வியல் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை இவ்வாய்வுக் கட்டுரை ஆராய்கிறது.

**முன்னுரை:**

தமிழ்ச் சமூகம் அழிவைச் சந்தித்த சூழலில் தெய்வப்புலவர் போன்ற சமூகப் பற்றாளர்கள் தமிழ்ச் சமூகத்தைத் தூக்கி நிமிர்த்த முனைந்தனர். அவ்வேட்கையின் விளைவே அற இலக்கிய உருவாக்கம். அற இலக்கியங்கள் நமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வியலின் சொல்லோவியங்கள். இச்சொல்லோவியங்களில் தங்கள் வாழ்ந்த வாழ்க்கையின் நன்மை தீமைகளை ஆராய்ந்து நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்வியல் கருத்துக்களாகும். இவ்வாய்வுக் கட்டுரை வாழ்வியல் சிந்தனைகளை ஆராய முற்படுகிறது.

**இல்வாழ்க்கை:**

இல்லறத்தில் ஈடுபடுவதே சிறப்பு என்ற உயரிய சிந்தனையைப் பல அற இலக்கியங்கள் எடுத்துரைக்கிறது.

**"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை மழையும்**
**தவம் இலார் இல்வழிவில்லை தவமும்**
**அரசன் இலாவழியில்லை அரசனும்**
**இல்வாழ்வார் இல்வழழி இல்"** - இப்பாடலில் மழையில்லாவிட்டால் இவ்வுலகில் எவ்வுயிருக்கும் வாழ்வில்லை. மழையும் தவம் செய்யக் கூடியவர்கள் காக்கும் அரசன் இல்லாதவிடத்தில் இல்லை. அரசனும் இல்லறத்தில் ஈடுபடக்கூடிய குடிமக்கள் இல்லாதவிடத்தில் இல்லை என விளம்பிநாகனார் கூறியுள்ளார்.

அன்பு செய்தல் என்பது இல்வாழ்க்கையின் அடிப்படைப் பண்பு . அன்பாகவும் அறனாகவும் உள்ள குடும்பமானது நல்ல வளமுடனும் நலமுடனும் வாழும். இதனை

**" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"** (குறள் -45) என்னும் குறளில் வலியுறுத்துகிறார்.

**இல்லாளின் மாண்பு:**

இல்லாள் என்ற சொல் இல்லத்தை ஆளும் மாட்சிமை பெற்று தலைவியைக் குறிக்கும். இல்லத்தை ஆளுகின்ற பொறுப்பினைப் பெற்ற பெண்ணிற்கு இருக்க வேண்டிய மாண்பினை வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் சிறப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**"மனத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொணடான**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"** (குறள் -51)

அறநூலான சிறுபஞ்சமூலத்தில் இல்லாளின் சிறப்புச் சுட்டிக் காட்டப் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

**"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றுப்**
**பெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித் திருவாக்குந்**
**தெய்வத்தையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு**
**செய்வதே பெண்டிர் சிறப்பு"**

இப்பாடலின் ஆசிரியர் காரியாசான் மனைவியானவள் வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்தல் வேண்டும். உறவினர்களை விரும்பிப் போற்ற வேண்டும். தெய்வத்தை எந்நாளும் மறவாமல் வழிபாடு செய்தல் வேண்டும். இதுவே மனைவியின் சிறந்த பண்பாகக் குறிப்பிட்டுயிருப்பதைக காண முடிகிறது.

**நன்மக்கள் பேறு:**

மக்கள் செல்வத்தினால் குடும்பம் மகிழ்ச்சி அடைகிறது. ;இல்லற வாழ்க்கையின் வளர்ச்சியாக மக்கட்செல்வம் அமைகிறது. வள்ளுவப் பெருந்தகை மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில்

**"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற"**

இல்லத்தில் ஈடுபடுவோர் பெறத் தகுந்த பேறுகளில் தலையாயது அறிவார்ந்த மக்கட்பேறு ஆகும்.

**விருந்தோம்பல்:**

விருந்தோம்பல் என்பது தமிழ் இனத்திற்கே உரிய தனிச்சிறப்பு ஆகும். அனைவரிடமும் அன்பு நிறைந்த வாழ்க்கை மேற்கொள்பவரால் மட்டுமே சிறப்பான விருந்தோம்பலைச் செய்யமுடியும். இதனை வள்ளுவர்

**"விருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"** (குறள் -81) என்கிறார்.

விருந்தினரைப் போற்றுபவரின் இல்லத்தில் திருமகள் வாழ்வாள்.

ஏலாதி என்னும் அறநூலில் விருந்தினரை வரவேற்று உபசரிப்பது குறித்து விளக்குகிறது.

**"இன்சொல் அளவால் இடம்இனிது ஊண்யாவர்க்கும்**
**வன்சொல் களைந்து வகுப்பானேல் மென்சொல்**
**முருந்து ஏய்க்கும் முட்போல் எயிற்றினாய் நாளும்**
**விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து"**

இப்பாடலில் தன் வீடு நோக்கி வரும் விருந்தினரை இன்சொல்லால் வரவேற்று உரையாடல்

வேண்டும். தங்குவதற்கு இடமும், உடையும், உணவும் அளிக்க வேண்டும். இவ்வாறு விருந்தினரை உபசரிப்பவனைத் தேவர்கள் தமது விருந்தினராக ஏற்றுக் கொள்வார்கள் என்கிறது.

**ஈகை:**

**"இயல்வது கரவேல்"** (ஆத்திசூடி) – கொடுக்க முடிந்த பொருளை இரப்பவர்க்கு கொடு.

**"அறனை மறவேல்"** (ஆத்திசூடி -30) – தருமத்தை எப்பொழுதும் மறவாமல் செய்.

**"நன்மை கடைபிடி"** (ஆத்திசூடி 65) – நல்வினைச் செய்தலை உறுதியாகப் பற்றிக் கொள் என்று அறம் குறித்து ஔவையார் கூறுகிறார்.

**"இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே"** (நறுந்தொகை 58) - இல்லை என்று கேட்பவருக்கு ஈவது பொருளுடையார் கடமை என்கிறது நறுந்தொகை.

கொடுப்பவர்கள் எல்லாரும் உறவினர் ஆவார்கள் என்பதனை நல்வழி

**"மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி**
**இரந்தழைப்பார் யாவருமங்கில்லை– சுரந்தமுதம்**
**கற்றா தரல்போற் கரவாது அளிப்பரேல்**
**உற்றார் உலகத்தவர்"** (நல் 29)

மற்றவர்களுக்கு மறைந்து வைக்காமல் கொடுப்பாராயின் உலகத்தார் வெளவாலைப் போல தாமே வந்து உறவினர் ஆவார்கள் . ஒருவனுக்கு மேன்மையும் , கீழ்மையும் தான் செய்யும் தர்மத்தாலும் செய்கையாலும் உண்டாகும்.

**கல்வி:**

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றார் ஔவையார். கல்வி என்பது ஒருவனுக்கு அழியாச் செல்வம் ஆகும். கல்வியை ஒருவன் எதை கொடுத்தாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறது வள்ளுவம்.

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்ற யவை"** (குறள் 400)

கல்வி கண்போல மனிதனுக்கு மிகத் தேவையானது என்பதை,

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"** (குறள் 392)

கல்வி என்பது உயர்நிலைக்குக் கொண்டு செல்லக்கூடியது. அறியாமையை அகற்றும் மந்திரக்கோல் கற்றால் மட்டும் போதுமா? அதன் வழியில் நிற்க வேண்டும்.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

தான் கற்க வேண்டிய நூல்களைப் பிழையில்லாமல் கற்க வேண்டும். அந்நூலில் கூறியபடி வாழ்ந்து காட்ட வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**பண்பு:**

பண்பு என்பது ஒருவனுடைய நல்ல குணத்தை சீர்தூக்கிப் பார்த்து கூறுவதேயாகும்.

**"அறம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்**

**மக்கட் பண்பு இல்லாதவர்"** (குறள் 997)

அறத்தை போல கூர்மையான அறிவுடையவர்களாக இருந்தாலும் மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவனை அஃறிணை உயிரான மரத்திற்கு ஒப்பாக வைத்து மதிப்பர். நல்ல பண்புடையவர்கள் இந்த உலகில் வாழ்வதால் தான இந்த உலகம் நிலைத்திருக்கிறது. இல்லை என்றால் இவ்வுலகம் என்றோ அழிந்து போயிருக்கும் என்பதனை

**"பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**

**மண்புக்கு மாய்வது மண் "** (குறள் 998) என்கிறார்.

**ஒழுக்கம்:**

**"ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை"** ஒழுக்கம் தான் ஒருவனை உயர்ந்தோனாக்கும் அது உயிரை விட மேலானது.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப் படும்"** (குறள் 131)

ஒருவன் ஒழுக்கம் தவறினால் உலகம் அழியும் வரையும் அவ்வழியிலிருந்து மீள முடியாது.

**பொறுமை:**

பொறுமையைப் போல சிறந்த அணிகலன் எதுவுமில்லை. பொறுத்தார் பூமியாள்வார். பொறுமையினால் ஏற்படுமு; நன்மை பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

**"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**

**பொன்றும் துணையும் புகழ்"** (குறள் 156)

பொறுமையே நமது வெற்றிக்கு அறிகுறி. பொறுமை என்பது நேரத்தைப் போக்குவது அல்ல. காலத்தை வெற்றிகரமாக மாற்றும் கனியாகும்.

**இன்னா செய்யாமை:**

நல்லது செய்யவில்லையாயினும் பிறர்க்குத் தீமை செய்தல் கூடாது.

**"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்மை**

**பிற்பகல் தாமே வரும்"** (குறள் 319)

பிறர் நமக்குத் தீமை செய்தாலும் நாம் அவருக்கு நன்மையே செய்ய வேண்டும்.

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயம் செய்து விடல்"** (குறள் 314)

**நன்றி மறவாமை:**

துன்ப காலத்தில் நமக்கு முன்வந்து செய்த உதவி அளவில் சிறியதாக இருப்பினும் அது

நிலவுலகத்தை காட்டிலும் பெரிதாகும்.

**“காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது”** (குறள் - 102)

**முடிவுரை:**

இவ்வாறாக அற இலக்கியங்கள் வாழ்க்கையை வளமாக்கும் மந்திர சொற்களாகும். மக்கள் மனதில் சிந்திக்க வைக்கிறது. நம்மையும் வாழச் செய்து பிறரையும் வாழச் செய்கின்றது. வாழ்க்கைக்கு உகந்த நெறிமுறைகளை அற இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகிறது. அத்தகைய அற இலக்கியங்களைப் போற்றி அவற்றின் வழி நடந்தால் மண்ணுலகம் மாண்புறும்.

**பார்வை நூல்கள்:**


1. பதிணென்கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும் , சாமி சிதம்பரனார் , அறிவுப் பதிப்பகம் - சென்னை
2. திருக்குறள், ப.சுப்பிரமணியன், இசையரசி பதிப்பகம், திருச்சி